**அதுரலிய பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 25 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து அதுரலிய பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு கிடைத்திருந்த ஏனைய வருமானங்கள் ரூபா 96,932 தொகை நிதி நிலைமை கூற்றில் பொறுப்புக்கள் என காட்டப்பட்டிருந்தது, | நிதி மற்றும் செயற்பாட்டுக் கூற்றில் கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பலவின செலவுகள் ரூபா 167,123 தொகைக்கான கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | கடன்கொடுத் தோர் ஏற்பாடு கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக் கள் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள் ளப்பட்ட ரூபா 319,475 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | நிலாயன சொத்துக் களை மூலதனப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 55,298,443 தொகைக்கான 04 கணக்கு விடயங்களில் உரிய மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 145,870 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதிகளில் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சமப்படாத மீதிகளை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 140,411,140 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 59 | சபையின் அதிகார பிரதேசத் தில் கைத்தொழில்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கைத்தொழில்கள் மீதான அட்டவணை ஒன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| (ii) விதி 218 | சபைக்குச் சொந்தமான அனைத்துக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீட்டு சபை நியமனம் செய்து கணிப்பீடு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நி.பி. 571 | இரண்டு வருடங்களை மிகைத் துள்ள ரூபா 147,719 தொகை பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நிதிப் பிரமா ணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | காலங் கடந்துள்ள வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) நி.பி. 1645 மற்றும் 1646 | 09 வாகனங்கள் தொடர்பாக நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்புக் கள் கணக்காய்விற்கு சமர்ப் பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமா ணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அனைத்து வாகனங்களி னதும் மாதாந்தப் பொழிப் புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிதல் பரிசோதனை மேற்கொள் ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமா ணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | விரைவாக எரிபொருள் பரிசோதனை மேற் கொண்டு சரியான முறையில் செயற்படுவேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,058,865 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,350,434 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,798,500 | 1,267,457 | 1,206,899 | 1,167,490 | 1,332,050 | 1,866,640 | 1,656,434 | 1,106,932 |
| வாடகை | 3,985,000 | 1,363,365 | 1,377,217 | 3,686 | 4,751,000 | 260,250 | 255,115 | 17,538 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 243,100 | 255,146 | 254,231 | 2,000 | 214,100 | 166,220 | 167,720 | 1,085 |
| ஏனைய வருமானங்கள் | 5,950,000 | 9,522,903 | 581,413 | 15,954,072 | 7,892,500 | 14,181,458 | 21,812,734 | 7,012,582 |
| மொத்தம் | 11,976,600 | 12,408,871 | 3,419,760 | 17,127,248 | 14,189,650 | 16,474,568 | 23,892,003 | 8,138,137 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 11,976,600 தொகை யாகும். மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 8,138,136 இற்கான நிலுவைத் தொகை மற்றும் சிட்டையிடல் ரூபா 12,408,871 தொகை உடன் ரூபா 20,547,008 அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 3,419,760 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 17,127,248 ஆகும். அறவீடுகளின் முன்னேற்றம் 16 சதவீதமாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி** | | |
| | ஆரம்ப நிலுவை ரூபா 1,055,228 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 656,222 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,711,450 தொகை அறவிடப் பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 506,524 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,204,926 தொகை நிலுவை மீதியொன்று காணப்பட்டது. மீளாய் வாண்டிற்கான மொத்த அறவீடுகள் சிட்டையிடல் மற்றும் வருட ஆரம்பத்திலுள்ள நிலுவை மீதியின் 30 சதவீதமாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | வீதவரி விரைவாக செலுத்துமாறு எழுத்துமூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | **ஏக்கர் வரி** | | |
| | ஆரம்ப நிலுவை ஏக்கர் மீதி ரூபா 44,954 தொகையாகக் காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 12,345 ஆகும். மீளாய்வாண்டின் மொத்த அறவீடுகள் ரூபா 10,932 தொகை ஆகக் காணப்பட்டதால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 46,367 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான மொத்த சிட்டையிடல் மற்றும் வரும ஆரம்பத்தில் உள்ள நிலுவை மீதியில் 19 சதவீதம் அளவான குறைந்த மட்டததில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | காணிகள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்ட உடன் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 272,050 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 15,428,321 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் உரிய நேரத்தில் கிடைப்பதில்லை என பிரதான செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது என அறியத் தருகின்றேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்** | | |
| மீளாய்வாண்டின் போது குப்பை சேகரித்தல் மற்றும் அகற்றுவதற்காக ரூபா 2,801,784 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வகைப்படுத்தப்படாமல் ஒரு வாரத்திற்கு சுமார் 02 தொன் குப்பை முறைசாரா விதமாக கொடபிடிய தனியார் காணி ஒன்றிற்கு அகற்றப்படுகின்றது. | முறைசார் விதமாக குப்பை அகற்றப்பட வேண்டும். | சேதனப் பசளை செயற்திட்டமொன்றிற்காக காணி ஒன்று பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்துள்ளதுடன், முறையான செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்படுகின்றது. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| | | |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்கு களுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நெருங்குவதற்கு திட்டமிடப்பட்டு செயற்படுத்த வேண்டும். | 2020 பாதீட்டின் மூலம் விரிவாக வெளியிடுவதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 05 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 03 மிகை பதவியணி யினை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியின் பதவிகளில் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். | வெற்றிட பதவிகளுக்காக அங்கீகாரம் பெற்ற பின்னர் நிரப்புவதற்று நடவடிக்கை எடுப்பேன் என குறிப்பிடு கின்றேன். |

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போதும் வீதவரி அறவீடு செய்தல் 2012 ஆண்டின் ஆதனங்களின் பெறுமதி மதிப்பீடு மீது மேற்கொள்ளப்பட்டதுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 146(1) இன் பிரகாரம் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விரைவாக பெறுமதி மதிப்பீடு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய பெறுமதி மதிப்பீடு மேற்கொள்வதற்காக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கடித ங்கள் அனுப்பப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 ஏப்ரல் 19 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 3/2017 மற்றும் 2009 ஏப்ரல் 16 திகதி 09/2009 பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் விரல் அடையாளம் பதிவு செய்யும் இயந்திரம் பயன்படுத்துவதன் மூலம் உள் வருகை மற்றும் வெளிச்செல்லலை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு நடவடி க்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு கூறுவிலைகள் அழைக்கப்பட்டுள்ளது. |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 செலவு விடயங்களில் சேமிப்புக்கள் ரூபா 5,278,589 தொகையாகக் காணப் பட்டதுடன் அப்பெறுமதிகள் 11 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | குறிப்பிட்ட உத்தியோகத்தரினை அறிவுறுத்தி முரண்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 03 வருமான விடயங்களை நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 5,304,028 தொகையாக இருந்ததுடன், அப் பெறுமதி 9 சதவீதம் முதல் 65 சதவீத வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | குறிப்பிட்ட உத்தியோகத்தரினை அறிவுறுத்தி முரண்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென்மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/ 01/ந.ச.லே இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. நிதிப்பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கத்தை பெற்றிருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிப் பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் கணக்காய்வு அறிக்கைகள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |